

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் இளைஞரணி செயலாளரும். துணை முதல்வர். இளம் தலைவர். உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள். நவம்பர் 27ல் மாவட்டம் முழுவதும் எழுச்சியுடனும், நலத்திட்டங்கள் வழங்கி கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட கழக செயலாளர். அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள். மு.கார்த்திகேயன், தலைமைச் செயற்குழு உறுப்பினரகள் சி.ராஜேந்திரன், கே.டி.மணி, தாமரைக்கண்ணன், மேயர். ஆ ராமச்சந்திரன், மாநகர செயலாளர். பா.ரகுபதி, அவைத்தலைவர். கே.ஆர். முருகன் உட்பட நிர்வாகிகள் இருந்தனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி, குன்றத்தூர் நகரத்தில் பூத் எண். 183 முதல் 224 வரை வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு முகாமினை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன் ஆய்வு செய்தார். திருப்பெரும்புதூர் தொகுதி தலைமை கழக பார்வையாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், குன்றத்தூர் நகரக் கழகச் செயலாளர், நகர் மன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி மற்றும் நகர நிர்வாகிகள், பி.எல்.ஏ. 2, பி.எல்.சி. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில்

# நடப்பாண்டில் 1,11,753 பயனாளிகளுக்கு ரூ.879.46 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது!

## அமைச்சர் எ.வ.வேலு தகவல்!



கள்ளக்குறிச்சி நவ. 18

கள்ளக்குறிச்சி சேலம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு (14.11.2024-வியாழக் கிழமை) அன்று கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகள் மற்றும் மாவட்ட அளவிலான சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில் நடைபெற்றது.

மேலும் இந்நிகழ்ச்சியில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ. ஜெ.மணிக்கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:

கூட்டுறவுத் துறையின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14 முதல் நவம்பர் 20 வரை ஒவ்வொரு கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு அகில இந்திய அளவில் கூட்டுறவு வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா புதுமை இந்தியாவை கட்டமைப்பதில் கூட்டுறவின் பங்கு என்ற கருப்பொருளின் அடிப்படையில் கொண்டாடப்படுகிறது. இதேபோன்று மாநில அளவில் தமிழ்நாட்டின் சமூக பொருளாதார மேம்பாட்டில் கூட்டுறவின் பங்கு என்ற கருத்துருவின் அடிப்படையில் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக மாவட்ட அளவில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 71 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா அரசின் புதிய செயல்திறன் மிகு திட்டங்களின் மூலம் கூட்டுறவை வலுப்படுத்துதல் என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இன்றைய தினம் கூட்டுறவு வார விழா தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இவ்விழாவில் சிறந்த கூட்டுறவாளர், கூட்டுறவுத் துறை சார்ந்த போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்கள், சிறந்த கூட்டுறவு சங்கங்கள், சிறந்த கூட்டுறவு நியாய விலைக் கடை விற்பனையாளர்கள் போன்றவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்விழாவில் விவசாயப் பயிர் கடன் 806 பயனாளிகளுக்கு ரூ.7,60,30,535/ மதிப்பீட்டிலும், கால்நடை பராமரிப்புக் கடன் 642 பயனாளிகளுக்கு ரூ.1,90,61,028 / மதிப்பீட்டிலும், மகளிர் சுய உதவிக் குழு கடன் 722 பயனாளிகளுக்கு ரூ.4,42,82,600/ மதிப்பீட்டிலும், மாற்றுத்திறனாளிகள் கடன் 4 பயனாளிகளுக்குரூ.2,00,000/ மதிப்பீட்டிலும், வீட்டுக் கடன் 2 பயனாளிகளுக்கு ரூ.2,50,000/ மதிப்பீட்டிலும், கல்விக் கடன் 1 பயனாளிக்கு ரூ.50,000/ மதிப்பீட்டிலும் என மொத்தம் 2,177 பயனாளிகளுக்கு ரூ. 14,21,24,163/ மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.நாடு முழுவதும் இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளான நவம்பர் 14ஆம் தேதி முதல் 20ஆம் தேதி வரை கூட்டுறவு வார விழா கொண்டாப்படுகிறது. 1904 ல் முதல்முதலாக கூட்டுறவு சங்கங்கள் இந்தியாவில் ஆங்கிலேயர்களால் தொடங்கப்பட்டது. 1932 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்டது. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் விவசாயிகளை உள்ளடக்கிய 83 தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களும், 3 மலைவாழ் மக்கள் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கங்களும், 2 நகர கூட்டுறவு கடன் சங்கங்களும், 1 சுய உதவிக்குழு சங்கம் உள்ளிட்ட 115 கூட்டுறவு சங்கங்கள் செயல்படுகின்றன.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மட்டும் 21,525 நபர்கள் பெற்ற ரூ.97 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 1,428 மகளிர் சுய உதவிக்குழு பெற்ற ரூ.14.38 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 466 மகளிருக்கு ரூ.28.50 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 2,000க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக்குழுக்கள் உள்ளன.

மக்கள் அதிகம் பயன்படுத்தும் நியாயவிலைக் கடைகளை நடத்துவது இந்த கூட்டுறவு இயக்கம் தான். கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் நடப்பாண்டில் பயிர்கடன், நகைக்கடன், கால்நடை பராமரிப்புக் கடன், மாற்றுத்திறனாளிகள் கடன், மத்திய கால கடன், மகளிர் சுய உதவிக் குழு கடன் என மொத்தம் 1,11,753 பயனாளிகளுக்கு ரூ.879.46 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆட்சி எப்பொழுதெல்லாம் வருகிறதோ அப்பொழுதெல்லாம் கூட்டுறவுத் துறையில் பல்வேறு வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. எனவே தமிழக அரசின் இதுபோன்ற நலத்திட்ட உதவிகளை பயனாளிகள் உரிய முறையில் பெற்று பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும் .

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.



சைதை மேற்கு பகுதி 139 அ வட்டத்திற்குட்பட்ட பின்வரும் 3 மையங்களில் வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர் சேர்த்தல், நீக்கல் முகாம் 16.11.2024.சனிக்கிழமை, 17.12.2024 ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரண்டு நாட்கள் காலை 10 மணி முதல் மாலை 5 வரை வட்டச் செயலாளர். சை.மு.சேகர் தலைமையில் டி.என்.சிவமணி, இ.வரதன்,மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ்,சுமதி தீனதயாளன், பூபதி. வெங்கடேசன் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர். மா.சுப்பிரமணியன், தொகுதி பொறுப்பாளர் பரிதி இளம் சுருதி, பகுதி செயலாளர். எம்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் 16 வாக்குச்சாவடிகளுக்கும் வருகை தந்து ஆய்வு செய்து சென்றனர்.



எழும்பூர் வார்டு 99 உள்ளடங்கிய 99 மற்றும் 99அ ஆகிய வட்டங்களில் உள்ளடங்கிய வாக்கு சாவடி மையம் பாக எண் :3,4,6,7,8,9,109,110,111,112, சுந்தரம் பிள்ளை தெரு சென்னை நடுநிலைப்பள்ளி மற்றும் ஈ.வி. ஆர் பெரியார் லேன் கேரளா சமாஜ் பள்ளிக்கூடம் ஆகிய இடங்களில் வாக்காளர் பட்டியல் திருத்தம் முகாம் நடைபெற்றது. இந்நிகழ்வில் தி.மு.க அயலக அணி மாநில துணைச் செயலாளர் 99 வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி நேரில் சென்று பார்வையிட்டார் உடன் 99வது வட்டக் கழகச் செயலாளர் ஆர். எம். ரங்கநாதன், மற்றும் 99அ வட்டக் கழகச் செயலாளர் சி. சேகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### கள்ளக்குறிச்சி - வெள்ளிமலை அரசு ஏகலைவா மாதிரி உண்டு உறைவிட

# ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மரக்கன்றுகள்!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் நட்டுவைத்தார்!

கள்ளக்குறிச்சி, நவ.18 -

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி, கல்வராயன் மலை வட்டம், வெள்ளிமலை அரசு ஏகலைவா மாதிரி உண்டு உறைவிட ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பில் தேசிய தொல்குடி நாளை முன்னிட்டு, தமிழ்நாடு பசுமை இயக்கத்துடன் இணைந்து மரம் நடும் விழாவினை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் (15.11.2024 - வெள்ளிக்கிழமை) அன்று பள்ளி மாணவர்களுடன் இணைந்து மரக்கன்றுகளை நட்டு தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் க.லட்சுமி பிரியா, மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் ச.அண்ணாதுரை, ம.தொ.ப., ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு கூடுதல் செயலாளர் இரா.உமா மகேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

நாடு முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்கள் 15ஆம் நாள் தேசிய தொல்குடி நாளாகக் கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் தமிழ்நாடு அரசின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், இன்றைய தினம் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் ஒரு பகுதியாக கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலை வட்டம், வெள்ளிமலை அரசு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மரம் நடும் விழாவினை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் நேற்றைய முந்தினம் தொடங்கி வைத்தார்.

தேசிய தொல்குடி நாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் தமிழ்நாடு பசுமை இயக்கத்துடன் இணைந்து மரம் நடும் விழா ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களால் நேற்றைய முந்தினம் வெள்ளிமலையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 328 பழங்குடியினர் பள்ளிகளில் பயிலும் சுமார் 24,000 மாணவர்களுக்கு ஒரு மரக்கன்று வீதம் அந்தந்த பள்ளி வளாகங்களில் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட உள்ளது.

தொடர்ந்து ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவ மா.மதிவேந்தன் தேசிய தொல்குடி நாளை முன்னிட்டு, அரசு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தொல்குடி பள்ளி பல்திறன் போட்டிகள் தொடக்க விழா இலச்சினையை (Logo) வெளியிட்டு, பள்ளி மாணவர்களுக்கு இலட்சினைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பழங்குடியினர் நல அலுவலர் பி.டி. சுந்தரம், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், பழங்குடியினர் நலத்துறை அரசு உயர் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணி!

## ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. – சன் முனியாண்டி ஆய்வு செய்தனர்!

சென்னை, நவ.18-

இந்து சமய அறநிலையத்துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி, சென்னை கிழக்கு மாவட்டம் வடக்கு பகுதிகளில் வாக்காளர் பட்டியல் சேர்த்தல், நீக்கல், சரிபார்த்தலுக்கான வாக்காளர் சரிபார்ப்பு முகாம் 16.11.2024, மற்றும் 17.11.2024 தேதிகளில் நடைபெற்றது..

இதில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் - வடக்கு பகுதி செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., சென்னை வடகிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும், அம்பத்தூர் தொகுதி பார்வையாளருமான சன்முனியாண்டி ஆகியோர் காலை 10.00 மணி முதல் அம்பத்தூர் வடக்கு பகுதி வார்டு 79, 79அ, 80 ,81, 85 86 மற்றும் தெற்கு பகுதி 90, 87 ஆகிய வாக்குச்சாவடிகளுக்கு சென்று ஆய்வுகள் மேற்கொண்டார்கள்.

மேலும் இதில் அம்பத்தூர் வடக்குப் பகுதி பாக நிலை முகவர்கள் BLA2, வட்ட கழக செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள் , கழக முன்னோடிகள் கலந்து கொண்டார்கள்.

### வட்டச் செயலாளர்கள் ஆர்.எம். ரங்கநாதன் - சி.சேகர் பங்கேற்பு:

# எழும்பூர் 99வது வார்டில் வாக்காளர் சரிபார்ப்பு முகாம்!

## மாமன்ற உறுப்பினர் பரிதி இளம் சுருதி தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ.18-

அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதலின்படி, எழும்பூர் வார்டு 99 உள்ளடங்கிய 99, 99அ ஆகிய வட்டங்களில் உள்ளடக்கிய வாக்குச்சாவடி நிலையத்தில் பாகம் எண்கள் : 3,4,6,7,8,9, 109,110,111,112, புரசை வாக்கம் சுந்தரம் தெரு சென்னை நடுநிலைப்பள்ளி மற்றும் ஈ. வி.ஆர். பெரியார் லேன் கேரளா சமாஜ் பள்ளிக்கூடத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தம் முகாம் நடைபெற்றது,,

இந்நிகழ்வில் 99வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர் தி.மு.க. அயலக அணி மாநில துணைச் செயலாளர் பரிதிஇளம்சுருதி பாகங்களில் நேரில் சென்று பார்வையிட்டார்,

இதில் 99வது வட்ட கழகச் செயலாளர் ஆர்.எம். ரங்கநாதன், 99வது (அ) வட்டக் கழக செயலாளர் சி. சேகர், பகுதி கழகத் துணைச் செயலாளர்கள் பி.சி. சம்பத்குமார், ஜே. கே. கருணாகரன், மாவட்ட பிரதிநிதிகள் டி.செபாஸ்டின், இரா. ஜெய்சங்கர், மாவட்டத் துணை அமைப்பாளர்கள், புரசை. ரவி, புரசை. பி. சதீஷ் குமார், முத்து ரவிச்சந்திரன், வட்டக் கழக நிர்வாகிகள் கே.ஆர். முரளி, வரதராஜன், ரா.முரளி, கோமளா, ஆர்.எஸ். வெங்கடேசன், பிஷ் மோகன், சாலை மாநகர் மாது, ஆர். கே.புரம் சுகுமார், 99வது (அ) வட்ட நிர்வாகிகள், சென்ட்ரிங் இளங்கோ, மில்க் ராஜ், ஜெய ஜான், கே.கனகா, கலைவாணி, சுகன்யா, பகுதி பிரதிநிதி ஜலேந்திர குமார், சந்தோஷ் உள்பட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.



2026சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு மயிலை கிழக்கு பகுதி (BLA2) அறிமுகம் மற்றும் ஆலோசனைக் கூட்டம் 13.11.2024 புதன்கிழமை அன்று பகுதிச் செயலாளர் எஸ்.முரளி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ.. தொகுதி பார்வையாளர் மாநில தகவல் தொழில் நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின் ஆகியோர் ஆலோசனை வழங்கினர். நந்தனம் கி.மதி எம்.சி., எஸ். முனுசாமி, சீமன்சேகர், பி.எல். தாஸ், குமாரி, எல்.உதயகுமார், ஏ.தாஸ், மா.பா. அன்பு, அ.தவனேசன், வி.வெற்றிவேல், கோ.கண்ணன், துரை பார்த்திபன், பா.பொன்னுசாமி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மதுரவாயல் 92-வது வட்டம்

# பகுதி துணை அமைப்பாளர் தமிழ் அழகனின் தாயார் ராஜேஸ்வரி அம்மாள் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி.



சென்னை, நவ. 18 -

மதுரவாயல் வடக்குப் பகுதி 92-வது வட்டக் கழகத்தைச் சார்ந்த பகுதி துணை அமைப்பாளர் எம்.சி.எஸ். தமிழ் அழகனின் தாயார் நேற்று மறைவெய்தினார் தகவல் அறிந்த கழகத்தினர் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினர்.

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 92 வது வட்டத்திற்கு உட்பட்ட பகுதி துணை அமைப்பாளர் எம்.சி.எஸ்.தமிழ் அழகனின் தாயார் திருமதி ராஜேஸ்வரி அம்மாள் நேற்று (17-11-24) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும், வட்டக் கழக நிர்வாகிகள், கழகத்தினர் முன்னாள் நிர்வாகிகள், அவரின் உடல் மீது மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.



சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதிக்குட்பட்ட வார்டு எண் 119, 119 அ வட்டங்களில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தல், சரிபார்ப்பு முகாம் நடைபெற்றது. சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி பொறுப்பாளர்; மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கும்மிடிப்பூண்டி சி.எச்.சேகர் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார். உடன், மேற்கு மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.என்.துரை மற்றும் 119 வது வட்டக் கழகச் செயலாளர் க.வே.மோகன் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.